49

காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை

மலர்: 1 இதழ்: 4

விலை

சஞ்சலம்

மலர் 1.] 16--8--64 [இதழ் 4

இரும்பு மந்திரியாகியுள்ள உயர்திரு.சஞ்சீவி ரெட்டியாரின், சேலம் பேச்சு சஞ்சல மூட்டுவதாக இருக்கிறது.

கண்காட்சிக்கான விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த இரும்பு அமைச்சருக்கு வாழ்த்திதழ் படித்தளித்த சேலம் நகராட்சி மன்றத் தலைவர்,

> சேலத்தில் எஃகு ஆலை அமைப்பது பற்றி மூச்சுப் பேச்சே காணுேமே.
>
> சேலம் எஃகு ஆலைத் திட்டம் கைவிடப் பட்டு விட்டதோ என்று சந்தேகமாக இருக்கிறதே

என்ற கருத்தினைத் தெரிவித்தார்.

மிக முக்கியமான நேரத்தில், பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் அமைச்சரின் கருத்தினைத் திட்ட வட்டமாகத் தெரிந்துகொள்ளும் நோக்குடன், சேலம் நகராட்சி மன்றத் தலைவர், பேசியதைப் பாராட்டுகிருேம்.

காங்கிரஸ் வட்டாரத்திலேயே, சேலம் எஃகு ஆலை பற்றி இப்போது அச்சம் கலந்த அய்யப்பாடு ஏற்பட்டு விட்டது.

காலத்தை ஓட்டுகிருர்கள்—காகிதத்தில் எழுதிக் காட்டுகிருர்கள்—கண் துடைப்பு வேலை நடக்கிறது—கடைசியில் கையை விரித்து விடுவார்கள்போல இருக்கிறது என்று நமது கழகத்தார் முன்பு சொன்னபோதெல்லாம், கோபித்துக் கொண்ட காங்கிரஸ்காரர்கள் கூட இப்போது, முகம் சுளித்துக் கொள்கிருர்கள், இன்னமும் சேலம் எஃகு ஆலை உருவாகக் காணுேமே என்பதை அறிந்து. சஞ்சீவி ரெட்டியார் பதிலளித்திருக்கிருர்.

> சேலம் இரும்பாலைத் திட்டத்தைக் கைவிட்டு விடவில்லை.

இந்தப் பதில், எவருக்கும் மகிழ்ச்சி தரக்கூடியது; பட்டுப் போக இருந்த நம்பிக்கையை மீண்டும் பசுமை பெறச் செய்யும் பேச்சு.

ஆனல் சஞ்சீவியார் இத்துடன் விடவில்லை; மேலும் பேசியிருக்கிருர்,

> சேலம் திட்டத்தையும் கைவிடவில்லை.
>
> ஆஸ்பட் திட்டத்தையும் கைவிடவில்லை.
>
> கோவா திட்டத்தையும் கைவிடவில்லை.
>
> எல்லாம் நிறைவேற்றப்படத்தான் வேண்டும்.
>
> அதிலும் ஆஸ்பட்டில் கிடைக்கும் இரும்புத் தாது எல்லாவற்றையும் விட உயர்வானது, தரமானது.
>
> இந்தத் திட்டங்களில் எதை எப்போது எவ்விதம் நிறைவேற்றுவது என்பதுபற்றி நிபுணர்களின் கருத்தினை அறிந்து அதன்படி நடவடிக்கையில் இறங்கப் போகிருேம்.

இந்தப் பேச்சு, சந்தேகத்தைக் கிளப்புவதாகவும் சஞ்சலத்தை மூட்டுவதாகவும் இருக்கிறது என்பது எவருக்கும் புரியக்கூடியதே.

> ஐயா! பசி காதை அடைக்கிறது! ஒரு கவளம்!!

என்று கேட்பவனிடம், 'தர்மதுரை' உனக்கு மட்டுமா பசி. உலகப்பனுக்குப் பசி, வேலப்பனுக்குப் பசி, வெங்கிடுசாமிக்கும் பசி, இதிலே பாவம வேலப்பன் சாப்பிட்டு நாள் ஆறு ஆகிறதாம் என்ருல், பொருள் என்ன? என்ன நடக்கும என்பதை யூகித்துக் கொள்ள அதிகத் திறமை கூடத் தேவையில்லை.

சேலத்திலே எப்போது? என்று கேட்டவர்களுக்கு. சஞ்சீவியார் நேரடியாகப் பதில் கூறவில்லை. ஆஸ்பட் இரும்பின் தரம் பற்றி அறிவிக்கிருர். பொருள் என்ன? சேலத்தில் எஃகு ஆலை துவக்குவதை விட, ஆஸ்பட்டில் துவக்குவது அதிக ஆதாயம் கொடுக்கும் என்கிருர். ஆகையால்? ஆகையாலா......! அதற்கும் சஞ்சீவியார் கோடிட்டுக் காட்டிவிட்டிருக்கிருர்; கூர்ந்து பார்த்தால், உண்மை துலங்கும்.

> நாம் நாலாவது திட்டத்தைப் பற்றி மட்டுமல்ல, அடுத்து வரவேண்டிய ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றியும் நினைத்துக் கொள்ள வேண்டும்.

உட்பொருள் என்ன? நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சேலம் எஃகு ஆலை அமையாது. அப்போது ஆஸ்பட், கோவா, இந்த இடங்களில் அமைப்போம், சேலத்தை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கவனிக்கிருேம் என்பதுதான்.

சேலத்திலே பேச நேரிட்டது போலவே, சஞ்சீவி யார், உருக்காலை கேட்கும் வேறு இடத்திலும்—ஹைத ராபாத்—பேசும் நிலை ஏற்பட்டபோது அங்கும் நமது சஞ்சலத்தை அதிகமாக்குவது போலவே பேசியிருக் கிறார்.

> சேலம்—ஆஸ்பட்—ஹைதராபாத்—எனும் மூன்று இடங்களிலும் உருக்காலை தேவை என்று கேட்கிறார்கள்.
>
> ஒவ்வோரிடத்தில் ஒவ்வோர் விதமான குறைபாடு இருக்கிறது.
>
> நிபுணர்கள், மூன்று இடங்களின் தன்மைகள் குறித்தும் ஆராய்ந்து பார்த்து, மூன்று இடங்களில் எங்கு துவக்குவது ஆதா யம் தரக்கூடியது என்று கூறுவர். அதற் கேற்பவே, சர்க்கார் செயல்படும்.

சேலம் எஃகு ஆலை அமைவதற்கான எல்லா ஏற்பாடு களும் முடிவடைந்து விட்டன—துவக்க விழா விரை வில்! என்று கூறப்பட்டு வந்த பேச்சுக்கும் இந்தப் பேச் சுக்கும் எத்துணை முறண்பாடு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும் எவரும் சஞ்சல மடையாமலிருக்க முடியாது.

சஞ்சீவ ரெட்டியார் மற்றோர் சாகசமும் செய்திருக் கிறார்.

> எங்கே எஃகு ஆலை அமைப்பது என்ப திலே தென் மாநிலங்களுக்குள் தகராறு எழக் கூடாது. தென் மாநில முதலமைச்சர்கள் கூடி இது பற்றி ஒரு முடிவு எடுக்கட்டும்; நான் அதை ஒப்புக்கொள்கிறேன்.

இப்படிப் பேசி, தமது பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட விரும்புகிறார்; கூடிப் பேசினால் ஒருமித்த முடிவுக்கு வர தென் மாநில முதலமைச்சர்களால் இய லாது போய்விடும் என்று எதிர்பார்க்கிறார். இது, பொறுப்பைத் தட்டிக் கழிப்பதைவிட ஆபத்தான போக்கு, தென்மாநிலங்களுக்கிடையில், 'குரோத' உணர்ச்சியை எழச் செய்துவிடும் சூதுமதி.

ஒவ்வோர் பொதுத் தேர்தலின்போதும், தமிழக அமைச்சர்கள் வாக்காளர்களுக்குக் கொடுத்த வாக் குறுதி—சேலத்தில் எஃகு ஆலை அமைக்கப்படும் என்ப தாகும்.

எதிர்க் கட்சிகள் இந்தப் பிரச்சினையை எழுப்பிய போதெல்லாம், தமிழக அமைச்சர்கள், சேலம் எஃகு ஆலை நிச்சயம் அமையும்; எமக்குத் தெரியும்; எம்மால் முடியும், என்று அடித்துப் பேசிவந்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் தமிழக சட்ட மன்றத்தில் நிதிநிலை அறிக்கை அளித்திடும்போது அமைச்சர் கெம்பீரக் குரலில், சேலம் எஃகு ஆலை பற்றிப் பேசி யிருக்கிறார்.

இவை யெல்லாம், வெறும் ஒலிகளாகி விடத்தக்க முறையில் இன்றைய நிலை ஆகிக்கொண்டு வருவது கண்டு உள்ளபடி வருத்தப்படுகிறோம். சேலம் எஃகு ஆலை இறுதியில் ஒரு சோக நாடகமாகி விடக்கூடுமோ என்றும் அஞ்சுகிறோம். காரணமற்று அல்ல.

இந்தியப் பேரரசின் முதலமைச்சர் லால்பகதூர் சென்ற கிழமை, பணவீக்கம்—விலை ஏற்றம்—உணவுத் துறையில் நெருக்கடி—ஆகியவை பற்றி, மாநில முத லமைச்சர்களுக்கு அனுப்பியுள்ள குறிப்பில்,

> திட்டச் செலவினத்தில் இனி, கனரகத் தொழிலுக்காக அதிகம் செலவிடத் தேவை யில்லை. உடனடிப் பலன் தரத்தக்க, திட்டங் களுக்கே பணம் செலவிடப்பட வேண்டும்.

என்று தெரிவித்திருக்கிறார்.

இந்த குறிப்பின்படி நடப்பதானால். எஃகு ஆலை அமைப்பு என்பது இப்போதைக்குத் தேவையற்றது என்ற முடிவு ஏற்பட்டு விடக்கூடும்.

இதை எண்ணித்தானோ என்னவோ சஞ்சீவி ரெட் டியார் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்சுாதீர்கள். ஐந்தாவது ஐந்தாண் டுத் திட்டமும் உண்டு என்று பேசியிருக்கிறார்.

இந்தப் பேச்சு, சஞ்சலம் மூட்டுவதற்கு ஒரு ஆதார மும் இருக்கிறது.

மத்திய அரசில் உள்ள மிகச் செல்வாக்குப் படைத்த அமைச்சர் ஒருவருக்கு, சேலத்தில் எஃகு ஆலை அமைவது வீருப்பம் இல்லை!

எனவே, கட்சி வேறுபாடுகளைக் கடந்து அனை வரும் ஒன்றாகத் திரண்டு சேலம் எஃகு ஆலைக்காக வாதாடினாலொழிய, ஏமாற்றமடைவோம்; ஆலையே அமையாது போகலாம் அல்லது ஆலை என்ற பெயரால் ஒரு 'பட்டறை'யை அமைத்துவிடுவதோடு, கடமை முடிந்ததாகக் கூறிவிடக்கூடும்.

அனைவரும் விழிப்புடன் இருந்து, விவரமறிந்து, வற்புறுத்தினாலொழிய சேலம் எஃகு ஆலை உருவாகாது என்ற அச்சமும் சஞ்சலமும், சஞ்சீவி ரெட்டியாரின் பேச்சினால் மூட்டப்பட்டுவிட்டிருக்கிறது.

சேலத்தில் எஃகு ஆலை அமைக்க, தமிழக அரசு தவறுமானால், பொதுமக்களுக்குக் கொடுத்துவந்திருக் கும் வாக்குறுதியை மீறிய குற்றத்துக்கு, ஆலை ஏற் படும், ஏற்படும் என்று மக்கள் மனதில் நம்பிக்கை எழச்செய்து, பிறகு நம்பிக்கைத் துரோகம் செய்த குற்றத்துக்கு ஆளாகிட நேரிடும். எதிர்க்கட்சிகள் இதனைப் பயன்படுத்திக்கொள்ள முனையும்போது ஏறிச் சல் கொள்வதிலே எள்ளளவும் நியாயம் இருக்க முடியாது.

தேர்தல் வேளையில், மக்களுக்கு தேனென இனிக் கும் விதமாக வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு, பிறகு இயலாமை, அறியாமை, பிடித்தமில்லாமை எனும் எதன் காரணமாகவோ, வாக்குறுதிகளை நிறைவேற்ரு மல் இருக்கும் கட்சியைக் கண்டிப்பது, ஜனநாயகக் கடமைகளிலே ஒன்று; வாக்குறுதியை மீறி, துரோகம் இழைக்கும் கட்சிக்குத்தக்க பாடத்தை பொதுத் தேர்த லின்போது அளித்திடுவது பொதுமக்களின் உரிமையு மாகும்.

நிதானம் தவருமல், அரசியல் கட்சி மாச்சரிய மில்லாமல், விளக்கமளித்து வரும் சுதேசமித்திரன் இதழ்கூட, சேலம் உருக்காலைக்கு முட்டுக்கட்டை என்ற தலைப்பிட்டுத் தலையங்கம் தீட்டுகிறது என்றால், நிலைமை எவ்வளவு மோசமாகி வருகிறது என்பதை விவரிக்கத் தேவையில்லை,

சேலம் உருக்காலை விரைவில் ஏற்படும் என்று எதிர்பார்த்து நிற்கும் தமிழ் நாட்டின ருக்கு மத்திய உருக்கு சுரங்கம் மந்திரி சஞ்சீவி ரெட்டி இப்போது பேசும் தோரணை கொடிய ஏமாற்றமுண்டாக்கும்.

இன்று எழும்பியுள்ள நிலையை, மழுப்பிடும் போக்கில் தமிழக அமைச்சர்கள் இருப்பது ஒன்று ஏமாளித்தன மாக முடியும் அல்லது தெரிந்தே துரோகத்துக்கு உடந்தையாக இருப்பதாகிவிடும். "யார் கூறுவதையும் கேட்காதீர்கள், சேலம் எஃகு ஆலை ஏற்பட்டே தீரும்!" என்று திரும்பத் திரும்ப 'தர்பார்' பேச்சுப் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. உடனடியாக தமிழக அமைச்சர்கள், உண்மையை மக்களுக்கு, நேர்மை யுடன் எடுத்துக் கூறிவிட வேண்டும்.

பன்னிப்பன்னி இந்தத் திட்டம்பற்றி, என்ன ஆயிற்று? எப்போது? ஏன் இந்தத் தாமதம்? என்று கேட்டபடி இருக்கவும், இடித்துரைக்கவும், எதிர்க்கட்சி கள் விழிப்புடன் இருக்கும்போதே, இந்தக்கதி ஏற்பட் டிருக்கிறது என்றால், காமராஜர் விரும்புவதுபோல எதிர்க்கட்சிகள் அற்ற நிலை ஏற்பட்டுவிடுமானால், நிலைமை எவ்வளவு படுமோசமாகிப்போகும் என்பதை யும் இந்த நேரத்தில் எண்ணிப்பார்த்திடுவது, ஜனநாயக வாதிகளின் கடமையாகும். தட்டிக் கேட்க ஆட்கள் இருக்கும்போதே இந்தக் கதி என்றால், 'எல்லாம் நானே' என்ற நிலை எற்படுமானால், நாடு எத்துணை சீர்கேடடை யும் என்பதை விளக்கிடத் தேவையில்லை

ஆந்திரத்தையும் மைசூரையும்விட சேலம் நெய்வேலிப் பகுதியில் உருக்காலை ஏற்படுவதற்கு வேண்டிய வசதிகள் அதிகம் என்பதை சஞ்சீவி ரெட்டியே ஒப்புக்கொள் கிறார். எனினும் அத்தகைய ஒரு உருக்காலை ஏற்படுவதில் சிரமமிருக்கிறது; எனவே அது பற்றி மேற்கொண்டு விசேஷமாக ஆராய்ந் தாகவேண்டும் என்று அவர் கூறுவது எப் படியாவது தமிழ் நாட்டில் உருக்காலை ஏற்பட விடக்கூடாது என்பதற்காகத்தானோ என்று தோன்றுகிறது.

'மித்திரன்' குறிப்பிடுவதுபோல, விருப்புவெறுப்பு நீக்கிப் பிரச்சினையைப்பார்த்திடும் எவருக்கும் அதுபோலத்தான் தோன்றும். ஆனால் அமைப்புகள் மூலமும், மாநாடு கள், இதழ் அறிக்கைகள் மூலமும், இந்த நிலைமையை எடுத்துக்காட்டி, சேலம் எஃகு ஆலை அமைக்கப்பட் டாக வேண்டும் என்று வலியுறுத்தினாலொழிய, தமிழக அரசு செயல்பட முனையாது. பார்த்தோமே, தேவிகுளம் பீர்மேடு பிரச்சினையில்! பார்த்துக்கொண்டிருக்கிறோமே பர்மா தமிழர்கள் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில்! தேவிகுளம்-பீர்மேடு தமிழகத்துடனேயே இருக்கும்; எதிர்க்கட்சிகளின் பேச்சைக் கேட்டு ஏமாறாதீர்கள்; தமிழக அரசுக்கு நல்ல வல்லமை இருக்கிறது; அமைச் சர்களுக்கு ஆற்றல் அபாரமாக இருக்கிறது என்றெல் லாம் முழக்கிவிட்டு, இறுதியில் தேவிகுளம் — பீர்மேடு மட்டுமின்றி, செங்கோட்டை வட்டத்தில் ஒரு பகுதியை யும் விட்டுக்கொடுத்துவிட்டு, முக்காடிட்டுத் திரும்பிய வர்களே, நமது தமிழக அமைச்சர்கள். சேலம் எஃகு ஆலை விஷயத்திலும், பொதுமக்களின் கொதிப்பை அடக்கிட சிலபல பேசிவிட்டு, பிறகு மேலிடம் காட்டும் இடத்தில் கையொப்பமிட்டுவிட்டு, அதற்காக துக்கப் படாமல் வெட்கப்படாமல், புதுக்காரணம் காட்ட முனைந்து,

இரும்பா முக்கியம்? கரும்பு!

சேலம் எஃகு ஆலையா முக்கியம்? சோறு!

என்று பேசிடவும் தயங்கமாட்டார்கள்.

எனவேதான் கூறுகிறோம், கட்சி வேறுபாடு காரணமாக, தமிழகத்துக்குக் கிடைத்தாக வேண்டிய ஒரு அடிப்படை வாய்ப்பை இழந்துவிடக் கூடிய முறை யில் பொறுப்புணர்ந்தவர்கள் நடந்துகொள்ளக்கூடாது என்று.

தென் மாநில முதலமைச்சர்கள் கூடிப் பேச வேண்டும் என்ற யோசனையைத் தாம் ஏற்றுக்கொள்ள வில்லை என்று பக்தவத்சலனார் கூறியதாகத் தெரி கிறது. இது போதாது.

சேலம் எஃகு ஆலை அமைப்புக்கான, உறுதியான, துரிதமான, நடவடிக்கையை மேற்கொண்டாக வேண்டு மென்று, தமிழக அரசினரை வலியுறுத்திக் கேட்கும் கடமையைச் செய்திட, அனைவரும் முன்வரவேண்டும், எவரும் தயக்கம் காட்டலாகாது,

சஞ்சீவி ரெட்டியாரின் போக்கும் பேச்சும் சஞ்சல மூட்டுகிறது என்றாலும், நிலைமையை நாம் உணர்ந்திட அஃது ஒரு வாய்ப்பு என்று கொண்டு, சேலம் எஃகு ஆலை அமைப்பு விஷயத்தில் தமிழக அரசு உடனடியாக செயல்பட வேண்டுமென அனைவரும் வற்புறுத்திட வேண்டுகிறோம்.

*

வெட்கப்படுகிறோம்

இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஈடுபட்டுச் சிறை சென்றுள்ள, தோழர் A. கோவிந்தசாமி அவர்கள், சென்னை பெரிய மருத்துவ மனைக்கு கொண்டு வரப்பட வேண்டிய அளவு உடல் நலம் கெட்டிருக்கிறது— சிறையில்.

மருத்துவ மனைக்கு அவரை அழைத்து வந்தபோது கைகளில் விலங்கிட்டுக் கொண்டு வந்ததாகத் தெரி கிறது. இதைக் கேள்விப்படும் சழகத் தோழர்களும், பண்பாளர் அனைவரும் பதறுவர்.

தோழர் கோவிந்தசாமிக்கு இழைக்கப்பட்ட இதே விதமான கொடுமை, மதுரைத் தோழர் முத்து, மற்றும் பலருக்கும் இழைக்கப்பட்டது; அப்போது கழகத்தினர் இந்த அநீதியை எடுத்துக் காட்டியுள்ளனர்,—அமைச் சர்களின் பார்வை படாததால் இந்த அநீதி நேரிட்டிருக் கிறது; அவர்கள் அறிந்தால் மேற்கொண்டு இதுபோல நடந்திட அனுமதி தரமாட்டார்கள் என்ற எண்ணத்தில்

ஆனால் அரசினர். இதனை அநீதி என்று ஏற்றுக் கொள்ளாததாலோ, அல்லது அலட்சியப் போக்கு

(13-ம் பக்கம் பார்க்க)

தம்பிக்கு -

பன்னீர் தெளித்தாலும்...!

தம்பி!

ஒரு சீமானின் மகனைப்பற்றிய கதை கூறப்போகிறேன் — ஏழைகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப்பற்றி அறிந்து, உள்ளம் உருகி, தக்கதோர் பரிகாரம் தேடித் தந்திடவேண்டும் என்ற உள்ளத் துடிப்புகொண்ட வாலிபன் பற்றிய கதை.

தகப்பனார் திரட்டிய திரண்ட செல்வத்துக்கு அதிபதியான இந்த மகன், அவருடை கல்லறையில் கண்ணீர் உகுத்தான்; சொத்தின் அளவுபற்றி குடும்ப வழக்கறிஞர் கூறிய விவரம் கேட்டு, வியப்பல்ல, அதிர்சசியே அடைந்தான்; மொத்தத்தில் 2,000,000 டாலர்கள் வைத்துவிட்டுச் சென்றார் அந்தச் சீமான்.

ரொட்டிக்குத் தேவைப்படும் கோதுமை வியாபாரத்திலே குவித்ததே அவ்வளவு செல்வமும்; கோதுமை வியாபாரம் என்றால், பெரிய பெரிய கிடங்குகளைப் பல இடத்திலே அமைத்துக்கொண்டு கோதுமையை மூட்டை மூட்டையாக அடைத்து வைத்துக்கொண்டு பலருக்கும் விற்பனை செய்தது என்பதல்ல பொருள். கோதுமை விளைந்து அறுவடையாகி சந்தைக்கு வந்து விலையாகுமுன்பே, வயலில் கோதுமைக் கதிர்கள் காற்றினால் அசைந்தாடிக் கொண்டிருக்கும்போதே, இன்ன விலைக்கு, இத்தனை அளவு கோதுமையை, இனன மாதத்தில் வாங்கிக்கொள்கிறேன் அல்லது விற்கிறேன என்று, 'பேரம' பேசி வைததுக்கொண்டு அதிலே இலாபம் சம்பாதிக்கும் முறை.

ஏழை எளியோருக்குத் தேவை ரொட்டிதானே! தேவை மட்டுமா! அதுதானே அவர்களால் பெறமுடியும்; மற்ற மற்ற உயர்ந்த விலையுள்ள உணவுப் பண்டங்களை அவர்கள் எங்கே வாங்கப் போகிறார்கள். எனன விலை ஏறினாலும், விலை ஏற்றம் எத்தனை தாறுமாறாக இருப்பினும், ரொட்டி வாங்கிததானே ஆகவேண்டும். போகப் பொருளாக இருப்பின, விலை ஏறிவிட்டது என்று தெரிகிறபோது வாஙகாமல் இருந்துவிடலாம்! இது வயிற்றுககுத் தேவையான பொருள்—ஏழைகள் பெற்றே தீரவேண்டிய ஒரே பொருள்; எனவே, அநியாய விலையாக இருககிறதே எனறு அழுகுரலிற் கூறிகொண்டாகிலும் வாங்கித் தீரவேண்டிய பொருள்.

இந்தப் பொருளை, இலாபவேட்டைப் பொருளாக்கினான் சீமான்; ரொட்டியின் விலை ஏறிற்று; சீமானுககுச செல்வம் குவிந்தது; ஏழைகள் கைபிசைநதுகொண்டனர்; அந்த ஏழைகளுக்காக ரொடடிக் கிடங்கு—ரொட்டிக்கடை நடததிய நடுத்தர வகுப்பினர் நொடித்துப் போயினா. சீமானோ சில ஆண்டுகளில் பெரும பொருள் குவித்துக்கொண்டான; களவாடி அலல, கள்ளக் கையொப்ப மிட்டு அல்ல; புரட்டு புனைசுருட்டால் அல்ல, வியாபார மூலம!



கஷ்டப்பட்டுச் சேர்த்தான் இத்தனை செல்வம் என்றே. அதிர்ஷ்ட தேவதை அணைத்துக்கொண்டாள். அவன் சீமானுனன் என்றே தானே எவரும் கூறுவர். உலக வாடிக்கை வே ்றுகவா இருக்கிறது.

மகன், திரண்ட செல்வத்தையும் பெற்றுன், அந்தச் செல்வம் எப்படித் திரட்டப்பட்டது என்ற உண்மை யையும் அறிந்துகொண்டான். அவன் மனம் என் னமோ போலாகிவிட்டது. ஆயிரமாயிரம் ஏழை எளி யோர்களின் வயிற்றில் அடித்தல்லவா அப்பா இவ்வளவு பணம் சேர்த்தார். அந்தப் பணத்துக்கல்லவா நாம் அதிபதியானேம். ஐயோ! பாவமே! எத்தனை எத்தனை ஏழைகள், அப்பாவின் வியாபார முறை காரணமாக கோதுமை விலை ஏறிவிட்டதால், குமுறினரோ, கலங்கி னரோ, கதறினரோ, துடித்தனரோ, துவண்டனரோ! அவர்களின் கண்ணீர் அல்லவா, என் கரத்தில் விளை யாடும் காசுகளாகி விட்டன. இது அநீதி! இது இரக்க மற்ற செயல்! ஏழை இம்சிக்கப்பட்டிருக்கிறுன், அதன் விளைவாகக் கிடைத்த பணம் என்னிடம் குவிந்திருக் கிறது. நான் இதயமுள்ளவன்! ஏழைக்கு இரக்கம் காட்டும் எண்ணம் கொண்டவன்! என்னுல் கூடுமான மட்டும், ஏழைகளுக்கு இதம் செய்வேன்; அப்பாவின் பேராசையால் அலைக்கழிக்கப்பட்டவர்களை நான் கை தூக்கிவிடுவேன்; என்னிடம் உள்ள செல்வத்தைக் கொண்டு இந்த திருத்தொண்டு புரிவேன் என்று தீர்மா னித்தான்.

பள்ளியில் அவனுடன் படித்த ஒரு நண்பன், பொரு ளாதாரக் கருத்துக்களையும் சமுதாய திருத்த தத்துவங் களையும் நன்ருக அறிந்திருந்தான். கல்லூரியில் அவன் பயிலச் செல்லவில்லை; தகப்பனுரின் நகைக் கடையில் வேலை தேடிக் கொண்டான்; கடிகாரம் பழுது பார்த்துத் தரும் நுட்பமான தொழிலிலும் பழகிக் கொண்டிருந் தான். அவனைத் தேடிவந்தான், சித்தம் உருகிய நிலை யினனுன சீமான் மகன். விவரம் கூறினுன்.

"ரொட்டிக்காக அந்த ஏழைகள் அதிகமாகக் கொடுத்த பணத்தை அவர்களிடம் திருப்பித் தர விரும் புகிறேன், உள்ளம் கொதிக்கிறது உண்மை அறிந்த பிறகு. ஏழையிடம் அநியாயமாகப் பறித்ததைத் திருப் பித் தந்தால்தான் என் மனம் நிம்மதியாகும். இதை எப்படிச் செய்யலாம், ஒரு யோசனை சொல்லு" என்று கேட்டான் சீமான் மகன்.

இலட்சியங்களைக் கற்றிருந்த அவன் நண்பன், தீப்பொறி பறக்கும் கண்ணினனுன்; ஏற இறங்கப் பார்த்தான். சீமான் மகனின் கரத்தை இழுத்துப் பிடித் துக்கொண்டு கூறினுன்,

"ஏழைக்கு இதம் செய்ய எண்ணுகிருயா? அது உன்னுல் முடியாது. உன்போல அநியாய வழிகளிலே பணம் திரட்டும் பேர்வழிகளுக்கு என்ன தண்டனை தரப் படுகிறது தெரியுமா! நீங்களாக உண்மையை உணர்ந்து, உள்ளம் உருகி, அநீதியைத் துடைத்து இதம் செய்யவேண்டும் என்று நல்லெண்ணத் துடிப்பு கொண்டாலும், இதம் செய்யும் ஆற்றல் அற்றுப் போனவர்களாகி விடுகிறீர்கள். உன் நோக்கம் சிறந் தது, ஆனல், வஞ்சிக்கப்பட்ட, இம்சிக்கப்பட்ட ஏழைக்கு இதம் செய்ய உன்னுல் முடியாது; காலம் கடந்துவிட்டது; விஷயம் முற்றிவிட்டது; ஏழையின் வாழ்வு பாழ்பட்டு விட்டது; உன்னுல் விளக்கேற்ற முடி யாது" என்ருன்.

சீமான் மகன், இம்சிக்கப்பட்ட ஏழைகள் அனைவ ரையும் தேடிக் கண்டு பிடித்து, ஒவ்வொருவருக்கும் இதம் செய்திட முடியாதுதான். ஆனல் என்னுல் இயன்ற மட்டும், என்னிடம் உள்ள செல்வத்தை இதற் குப் பயன்படுத்துவேன்" என்ருன்.

அந்த நண்பன், அக்கரையற்ற குரலில், "எத்த னையோ தர்ம ஸ்தாபனங்கள் உள்ளனவே உன் பணத் தைப் பெற" என்ருன்.

சீமான் மகனே, கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கும் கதை அல்லவோ அது. வேண்டாம். நான் ரொட்டி வாங்கி கஷ்ட நஷ்டப் பட்டவர்களுக்கே உதவி செய்ய விரும்புகிறேன்." என்ருன்,

"கோதுமையை உன் தகப்பனுர் மடக்கிப் போட்டு விலை ஏற்றத்தை மூட்டி விட்டாரே அதன் காரணமாக, ஏழைகள் உணவு பெறுவதிலே, ஏற்பட்ட நஷ்டத் தொகையைத் திருப்பித் தர, எவ்வளவு பணம் தேவைப் படும் தெரியுமா?" என்று கேட்டான். எனக்குத் தெரி யாது. ஆனல் என்னிடம் உள்ள பணம் 2,000,000 டாலர்கள்" என்ருன் சீமான் மகன். "கோடி டாலர்கள் இருந்தாலும் போதாதப்பா, கொடுமைக்கு ஆளான மக்களுக்கு இதம் செய்ய; நியாயம் வழங்க. அநியாய வழியில் திரட்டப்படும் பணத்தால் முளைத்திடும் ஆயிரத் தெட்டு கேடுகளை நீ என்ன அறிவாய்!! ஏழையிடம் கசக்கிப் பிழிந்து வாங்கப்பட்ட ஒரு காசு, ஓராயிரம் தொல்லையை ஏழைக்குத் தருகிறது. உன்னுல் முடி யாது, தந்தையின் வாணிப முறையின் காரணமாகக் கொடுமைக்கு ஆளான ஒருவருக்குக்கூட இதம் செய்ய" என்றுரைத்தான். சீமான் மகனுக்குப் புரியவு மில்லை; இந்தப் பேச்சு பொருளுள்ளதாகவும் தெரிய வில்லை.

"முடியும் நண்பா! முணுமுணுக்காமல், விவரம் கூறு." என்று கேட்டான். "கூறவா! கூறுகிறேன் கேளப்பா, கருணுகரா! அதோ அடுத்த தெருவில் ஒரு வன் ரொட்டிக் கடை வைத்திருந்தான்; எனக்குத் தெரி யும். பரம ஏழைகள் அந்தக் கடையில் ரொட்டி வாங்கு பவர்கள். விலையைத்தான் ஏற்றிவிட்டாரே உன் தகப்ப னுர்; இவன் ரொட்டியின் விலையை ஏற்றினுன்; ஏழைக ளால் அந்த விலை கொடுத்து வாங்க முடியவில்லை. கடை தூங்கிற்று; அவன் கடையில் போட்டிருந்த ஆயிரம் டாலர் அடியோடு நஷ்டமாயிற்று. அவனிடம் இருந்த மொத்த ஆஸ்தியே அதுதான். அவ்வளவும் போய்விட்டது" என்ருன்.

அழுத்தந் திருத்தமாகப் பேசலானுன் சீமான் மகன், "அப்படிச் சொல்லு விவரத்தை! வா! உடனே போய்; அந்த கடைக்காரன் இழந்த ஆயிரம் டாலரைத் திருப்பிக் கொடுத்து அவனுக்கு ஒரு புதிய ரொட்டிக் கடையும் வைத்துக் கொடுக்கலாம்" என்ருன்.

"எழுதப்பா, செக்! ஆயிரம் டாலருக்கு மட்டுமல்ல; அவன் நஷ்டமடைந்ததால் ஏற்பட்ட விபரீத விளைவு களின் காரணமாக ஏற்பட்ட நஷ்டங்கள் எல்லாவற் றுக்கும், செக் எழுதிக் கொடு! ஐம்பதாயிரம் டாலர் செக் ஒன்று கொடு! ஏனென்கிருயா! கடை திவாலா

யிற்று, அவன் அதன் காரணமாகக் குழம்பினுன், பித்துப் பிடித்துவிட்டது, அவன் இருந்துவந்த இடத்தை விட்டு அவனை வெளியேறச் சொன்னுர்கள், அவன் அந்தக் கட்டடத்துக்குத் தீயிட்டான். ஐம்பதாயிரம் டாலர் பாழ்! அவனே பித்தர்விடுதியில் அடைபட்டான் செத்தும் போனுன். அடுத்த செக் பத்தாயிரம் டால ருக்கு. ஏனு? அவன் மகன், தகப்பனை இழந்ததால் தறுதலையானுன்; கெட்டலைந்தான்; அவன்மீது ஒரு கொலைக் குற்றம்; மூன்று ஆண்டுகள் வழக்கு; அதற் கான செலவு நீதித் துறைக்கு, பத்தாயிரம் டாலர். அதையும் நீதானே கொடுக்கவேண்டும்; கொடு.

''சர்க்காருக்கான செலவு இருக்கட்டும்; நமது உதவி தேவையில்லை சர்க்காருக்கு; ரொட்டிக் கடைக்கு ஏற்பட்ட நஷ்டம் வரையில் கொடுத்திடலாம்; முடியும்'' என்றுன் சீமான் மகன்.

"விலை ஏற்றத்தை மூட்டி விட்டதனுல் ஏற்பட்ட விபரீத விளைவுகளில், இன்னென்று பாக்கி இருக்கிறதே! காட்டுகிறேன் வா!'' என்று கூறி அந்த நண்பன் சீமான் மகனை அழைத்துக்கொண்டு, ஒரு முட்டுச் சந்திலிருந்த ஒரு நிலையத்துக்குள் சென்று, அங்கு, சட்டை தைத்துக் கொண்டிருந்த இளமங்கையைக் காட்டினுன். அவள் ஒரு புன்னகை உதிர்த்தாள். "இன்று நாலு டாலர் கிடைக்கும் எனக்கு'' என்றுள் அந்தப் பெண். நண்பன், சீமான் மகனை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

"ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கோதுமைவிலை ஏறி டதே; அந்த விலை ஏற்றத்தை மூட்டியவரின் மகன் இந்த இளைஞன். தன் தகப்பனுரின் செயலால் சீரழிக் கப்பட்டவர்களுக்கு ஏதாகிலும் இதம் செய்ய வேண்டு மென விரும்பி வந்திருக்கிறுர்'' என்றுன். அந்தப் பெண்ணின் புன்னகை மடிந்தது; முகம் கடுகடுத்தது; எழுந்தாள், சீமான் மகனை நோக்கி வெளியே போ! என்று கூவவில்லை, கையால் குறி காட்டியபடி நின்றுள்.

தம்பி! கதையை இந்த அளவுடன் நிறுத்திவிட எண்ணுகிறேன். ஏனெனில் என் நோக்கம், இரு இளை ஞர்கள், ஒரு மங்கை, இவர்கட்கு இடையிலே ஏற்பட்ட தொடர்பு பற்றிய விவரம் கூறுவது அல்ல. உணவுப் பண்டங்களின் விலை ஏற்றம், சீமான்களின் வாணிப முறையின் விளைவு என்பதைக் காட்டவும், அந்த விலை ஏற்றத்தால் தாக்கப்படும் ஏழைகளுக்கு ஏற்படும் இன்னல், அதிகவிலை கொடுத்ததால் ஏற்பட்ட பண நஷ்டம் மட்டுமல்ல, விபரீதமான பல விளைவுகள் ஏற்பட்டுவிடுகின்றன என்பதையும் எடுத்துக் காட்டவே இந்தக் கதையைக் கூறினேன். கதையும் என் கற்பனையில் உதித்தது அல்ல. அல்லற்படுவோர்களின் உள்ளத் தைப் படம் பிடித்துக் காட்டத்தக்க விதமான சிறு கதைகளைத் தீட்டிய வித்தகர் ஓ. என்ரியின் கற்பனை; நான் அதிலிருந்து கருத்தினை எடுத்து என் வழியில் எழுதித் தந்திருக்கிறேன்.

ஓ. என்ரி, சிறு கதை தீட்டுவதிலே வல்லவர் மட்டுமல்ல; அதிலே விந்தை பல இழைத்தளிப்பவர். இந்தக் கதையிலும், விலைவாசி விஷம்போல் ஏறுவதால்—ஏற்றி விடப்படுவதால்—விளையும் விபரீதம் பற்றிக் கூறிவிட்டு, ஒரு விந்தையை இழைத்திருக்கிறுர். இரக்க மனம் படைத்த சீமான் மகன், இலட்சியம் அறிந்த ஒரு வாலிபன், கொடுமை கொட்டியதால் கொதிப்படைந்த ஒரு குமரி! இந்த மூன்று பேர்களை வைத்துக் கொண்டு, உணவுப் பொருளின் விலையை, இலாபவேட்டை நோக்கம்கொண்ட வணிகர்கள் விஷம்போல ஏற்றிவிட்டு விடுவதனுல், ஏற்படும் விளைவுகளை, நாம் உணரவும் உருகவும் செய்துவிடுகிறுர்.

பிறகு? பிறகு? என்ன செய்தான் அந்தச் சீமான் மகன்? அந்தக் குமரி? என்று கேட்கிறுய். ஆவலாகத் தான் இருக்கும், அறிகிறேன். ஓ. என்ரியின் முறை என்ன தெரியுமா, தம்பி! சிறு கதையின் கடைசி இரண்டொரு வரிகளில், யாரும் எதிர்பார்க்காத ஒரு திருப்பம் அளித்து முடிப்பார்! அந்த இரண்டொரு வரிகளில், ஒரு பெரிய தத்துவமே கிடைத்திடும்.

சே! இந்த ஏழைகளுக்கே ஆணவம் அதிகம்!—என்று வெகுண்டுரைத்து விட்டுச் சென்றுன் சீமான் மகன் என்று முடித்திடலாம், கதையை.

இலட்சியமறிந்த இளைஞன். சீமான் மகனின் கண்கள் தளும்பக் கண்டு, 'பாவம்! இவன் நல்லவன். இதயம் கொண்டவன். இவனை வெறுக்கக் கூடாது. தகப்பனுர் செய்துவிட்டுப்போன கொடுமையை எண்ணி இவன் உள்ளம் உருகிக்கிடக்கிறுன்'' என்று பரிந்து பேசினுன்; மூவரும் நண்பர்களாயினர் என்று கதையை முடித்திருக்கலாம்,

"என்ன காரியம் செய்துவிட்டோம். உதவி செய்ய வந்த உத்தமனை உதாசீனம் செய்து விட்டோமே! அவன் உள்ளம் என்ன பாடுபட்டிருக்குமோ?'' என்று எண்ணிய பெண், அவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள் என்று முடித்திருக்கலாம். பலவிதமான முடிவுகள். தம்பி! உனக்கும் எனக்கும் தோன்றும். ஆனுல் விந்தையான—ஆனுல் உலக நடை முறையை விளக்கிடத்தக்க—முடிவு என்னவாக இருக்கமுடியும் என்பதைக் கண்டறிந்து கூறிடும் திறன், ஓ. என்ரிக்குத்தான் உண்டு,

இந்தக் கதையின் மூலம் என்ன தெரிவிக்க விரும்புகிறுர் ஓ. என்ரி.?

> சீமான் மகனின் மனமும் திருந்திவிடும்;
> இம்சை செய்யப்பட்டவர்களுக்கு இதம் செய்திடுவான்.

என்ற கருணை பற்றிய விளக்கமளிக்க அல்ல அவர் விரும்பியது.

> ஏழைக்கு இழைக்கப்'படும் இன்னலுக்கு, இன்னல் இழைத்தவர்களே பிறகோர் நாள் இதம் செய்திட விரும்பி முன்வந்தாலும், நொந்துபோன ஏழையின் வாழ்வை, இரக்கம், கருணை, உதவி மூலம் மலரச் செய்திட முடியாது. கசங்கிய மலர், மீண்டும் தண்ணீருக்குப் பதில் பன்னீர் தெளித்தாலும், எழில் பெற முடிகிறதா? அதுபோலத்தான்.

இந்தக் கருத்தை விளக்கவே அவர் கதை புனைந்தளிக்கிறுர்.

இரக்கம், பரிவு, பாசம், இவை தனிப்பட்டவர்களின் உள்ளங்களில் எழக்கூடும்; நத்தையிலும் முத்து

கிடைப்பதுபோல! ஆனால் ஏழை நொந்த வாழ்வு பெறுவது, ஒரு கொடிய முறை காரணமாக. அந்தமுறையை, தனி ஒருவனின் இரக்கம், பரிவு, தானம், தருமம் போன்றவைகளால், போக்கிடவோ, அந்த முறை காரணமாக ஏற்பட்டுவிடும் விபரீதங்களை நீக்கிடவோ முடியாது. இதைக் கூறும் துணிவே, பலருக்கு ஏற்படாது. ஓ. என்ரி இதனைக் கூறுவது மட்டுமல்ல, ஒரு சீமானின் மகன்; ஏழையிடம் இரக்கம் காட்டும் பயணத்தைத் துவக்கினால், அந்தப் பயணம், எதிலே போய் முடியும், நடக்கக் கூடியது எதுவாக இருக்க முடியும் என்பதை, நகைச் சுவையுடன், ஆனால் அதேபோது இரண்டு சொட்டு கண்ணீரும் கிளம்பிடத்தக்கதானதாகக் கூறுவார்.

சரி! கதையை முழுவதும் கூறத்தான் வேண்டும்; கூறிவிடுகிறேன், தம்பி! கூறவேண்டியது அதிகமுமில்லை.

எங்கே நிறுத்தினேன் கதையை? ஆமாம்! அவள் கோபத்துடன், சீமான் மகனை வெளிஏற்றுகிறாள்; அந்தக் கட்டத்தில்தான் நிறுத்தினேன்.

அடுத்த கட்டம் என்ன தெரியுமா, தம்பி!

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, அந்தக் கட்டம்.

இலட்சியமறிந்த நண்பன் இருக்கிறானே, அவனைக் காண்கிறோம். ஒரு பெரிய ரொட்டிக் கடை முதலாளியின் 'தங்க பிரேம்' போட்ட மூக்குக் கண்ணாடியைச் சரிபார்த்து, எடுத்துக்கொண்டு போகிறான், கொடுத்திட. ஒரு உரையாடல் அவன் காதில் விழுகிறது.

"என்ன விலை, ரொட்டி."

"பத்துப் பணம்."

"பத்துப் பணமா! விலை அதிகம். எட்டுப் பணத்துக்கு வேறுஇடத்தில் கிடைக்கிறதே!"

திரும்பிப் பார்க்கிறான், குரலொலி கேட்டு, அதே பெண்; சட்டை தைத்துக் கொண்டிருந்தாளே; விலை ஏற்றத்தால் நாசமாகிப் போனானே சிறு ரொட்டிக் கடைக்காரன் அவன் மகள்; உதவி செய்ய வந்த சீமான் மகனை வெறுத்து விரட்டினாளே அதே பெண்!

"ஐயா! நலமாக இருக்கிறீர்களா?"— அவள் கேட்கிறாள்.

"இருக்கிறேன், போய்னி!" என்கிறான் இலட்சியமறிந்தவன்.

போய்னி என்பது கன்னியின் பெயர்.

"நான் இப்போது திருமதி. கின் சால்விங்! எனக்கும் கின்சால்விங்குக்கும் போன மாதம் திருமணமாகி விட்டது." என்கிறாள் அவள்.

கின் சால்விங் என்பது யாருடைய பெயர் தெரியுமா தம்பி! சீமான் மகன் பெயர்!!

கதை அவ்வளவுடன் நின்றுவிடுகிறது! கருத்து என்னென்ன மலருகிறது எண்ணிப் பார், தம்பி!

ஓ. என்ரியின் விந்தை மிகு திறமையைக் கூறிடவே கதை முழுவதும் சொல்லி வைத்தேன்—நான் இதிலே உன்னை மீண்டும் மீண்டும் கருத்தில் கொள்ளும்படிக் கேட்டுக் கொள்வது,

விலை ஏற்றங்களில் உணவுப் பொருளின் விலை ஏற்றத்தைப் போன்ற கொடுமைமிக்கது வேறு எதுவும் இல்லை. விலை ஏற்றம் என்பது பெருத்த இலாபத்தை மிகக் குறைந்த நாட்களில் கொள்ளை போலப் பெறவேண்டுமென்று திட்டமிட்டு, வாணிபத் துறையினர் செய்திடும் சதி.

உணவுப் பொருள் விலை ஏற்றத்தின் காரணமாக அவதிப்படும் ஏழைகளின் வாழ்வு நொந்துபோகும் கொடுமையை நீக்கிட, இன்மொழி, இதமளித்தல், பரிவு காட்டுதல், எனும் முறைகள் பயன்படாது.

விலைவாசி ஏற்றத்தினால் ஏற்படுவது, ஏழைக்குப் பொருள் நஷ்டம் மட்டுமல்ல, பல்வேறு விபரீத விளைவுகள் ஏற்பட்டு விடுகின்றன.

இந்தக் கருத்துகளை உணர்த்திடச்செய்வதற்கே, இந்தக் கதையைக் கூறினேன்.

உணவுப் பொருள்களின் விலை ஏறிவிட்டது; ஏறிக் கொண்டே இருக்கிறது, என்பதைக் காங்கிரஸ் அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது!

கைப்புண்ணுக்குக் கண்ணாடியா! என்று கேட்கத் தோன்றும். என்ன செய்வது, தம்பி! இந்தஉண்மையை ஒப்புக்கொள்ளும் மனம், இப்போதுதானே வந்திருக்கிறது, காங்கிரஸ் அரசுக்கு.

ஆண்டு இரண்டாகிறது நமது கழகத்தவர், விலைவாசி ஏற்றக் கொடுமையைக் கண்டு குமுறி எழுந்து, முறையிட்டுப் பலன் காணாததால், கிளர்ச்சி நடத்தி, சர்க்காரின் கண்களைத் திறந்திட முயன்ற நிகழ்ச்சி வேலூர் சிறையிலே நான் அடைபட்டுக் கிடந்தேன்; உள்ளம் வெதும்பிய நிலையில்.

உணவுப் பொருளின் விலை விஷம்போல ஏறிவிட்டது, ஏழையின் வாழ்வில் இம்சை அதிகமாகிறது.

என்ற உண்மையை ஒப்புக் கொள்ளக்கூட இந்த ஆளவந்தார்களுக்கு மனம் இல்லையே! இது என்ன ஆட்சி!! என்று எண்ணி மெத்த வருத்தப்பட்டேன். நமது தோழர்கள் பல ஆயிரவர் சிறையிலே வாடிக் கிடந்தனர்; உள்ளே எத்துணையோ கொடுமைகள்; வெளியே எத்தனை எத்தனையோ ஏச்சுப் பேச்சுகள். எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டோம். இரு தோழர்களையும் பறிகொடுத்தோம்; இதயத்திலே தழும்பு பெற்றோம்.

உணவு விலையா ஏறி இருக்கிறது!

ஏறினால் என்ன கேடு வந்து விட்டது!

பணம்தான் புரளுகிறதே தாராளமாக; விலை ஏறினால் என்ன?

கூலிதான் கிடைக்கிறதே ஏராளமாக, விலை ஏறினால் என்ன கஷ்டம்?

அரிசி விலையைக் குறைக்க அரி அர பிரம்மாவினாலும் முடியாது.

விவசாயி தலையில் கை வைத்தால்தான், அரிசி விலையைக் குறைக்கலாம்.

வளருகிற பொருளாதாரத்தில் விலை
ஏறத்தான் செய்யும்.

இவை, ஆளவந்தார்கள் அன்று உதிர்த்த பொன்மொழி களிலே சில!

ஒருவர் மிகத் துணிச்சலுடன் அடித்துப் பேசினர்,

விலை ஏறி இருப்பது நாட்டின் சுபீட்சத்
தைக் காட்டுகிறது

என்று.

ஒருவரும், விலைவாசி விஷம்போல ஏறி இருப்பதை இறக்கத்தான் வேண்டும் என்று கூறவில்லை; விலைவாசி ஏறி இருப்பது இயற்கை, நியாயம், தவறு இல்லை, தீது அல்ல, என்று வாதாடினர்கள். நினைவிலிருக்கிறதல்லவா, தம்பி!

அப்படியே விலை ஏறி இருந்தாலும், அதைக் குறைக்க, கிளர்ச்சியா வழி? என்று கேட்டவர்களும்,

அப்படியே கிளர்ச்சி செய்வதானலும், கலெக்டர் அலுவலகத்தின் முன்பு நின்றுகொண்டு விலை குறைய வேண்டும் என்று கூச்சலிடுவதா பயனுள்ள கிளர்ச்சி என்று கேட்டவர்களும்,

அதுதான் கிளர்ச்சி என்று வைத்துக் கொண்டாலும், அதனை ஒழுங்கான முறையில், பலாத்காரமின்றிச் செய்திடும் திறமை இருக்கிறதா என்று கடாவினேரும்,

கிளர்ச்சி ஆபாசமாகப் போய்விட்டதற்குக் காரணம் நான் கூறுகிறேன், கேண்மின்! தலைமை, அவ்வளவு மோசமானது!! திறமையற்றது!! என்று குரலெழுப்பினேரும்,

சட்டசபையில் பேசிடாமல் சந்து முனை சென்று கத்துவதா! இதுவா கிளர்ச்சி என்று அரசியல் பாடம் போதிக்க முன்வந்தவர்களும், ஏ! அப்பா! எத்தனை எத்தனை பேர்!!

இவர்களை ஜாமீன் கேஸ் போட்டு, உள்ளே தள்ளி வைக்க வேண்டும் என்று முழக்க மெழுப்பினேரும்,

இவர்கள் சிறுபிள்ளைத்தனமாக ஒரு கிளர்ச்சி நடத்தி கிளர்ச்சிக்கு இருந்துவந்த மதிப்பையே பாழாக்கி விட்டார்களே! இனி எந்தக் கிளர்ச்சியும் செய்யவே முடியாத நிலையாகி விட்டதே என் செய்வது! என்று சோக கீதம் பாடிக் காட்டியவர்களும்,

வீணன கிளர்ச்சி செய்தார்கள்; அதை அடக்கப் பணம் செலவாயிற்று; அந்தப் பணம் இருந்தால் பத்து பள்ளிக்கூடம் கட்டியிருக்கலாம் என்று பொருளாதாரப் பேரறிவைப் பொழிந்தவர்களும்,

உற்பத்தி பெருகுவது ஒன்றுதான் விலைகளைக் குறைத்திடச் செய்யும் ஒரேவழி, நல்வழி, எம்வழி! என்று அகில உலக அறிவைத் தம்மிடம் ஏகபோகமாக வைத்துக்கொண்டிருப்பதாக எண்ணிக்கொண்டு எக்காளமிட்டவர்களும், இருக்கிருர்கள், தம்பி! இங்கேயேதான் இருக்கிருர்கள்—இளித்தவாயர்களாகிவிட்டோம் என்று ஒப்புக்கொள்ள மனமின்றி, அன்று என்னென்ன பேசினர்களோ அவ்வளவையும் விழுங்கி விட்டு இன்று,

விலைவாசி ஏறிவிட்டது ஒப்புக்கொள்
கிருேம்.

விலைவாசி கட்டுப்படுத்தப் படவேண்டும்,
ஒப்புக்கொள்கிருேம்.

என்று விநயமாகப் பேசி வருகிருர்கள். நமது கிளர்ச்சியை மதிக்க மறுத்தார்கள்; இன்று அவர்களின் முன்னுள் முடுக்கு மாய்ந்தது; உண்மையை ஒப்புக்கொண்டு தீரவேண்டிய நிலை பிறந்தது.

இதற்காக ஒரு கிளர்ச்சியா? என்று கேட்டபடி இடி முழக்கங்கள், இன்று கிளர்ச்சி நடத்த முனைந்து விட்டோம் என்று முழக்குகின்றனர்.

கலெக்டர் அலுவலகத்தின் முன்பா, கிளர்ச்சி! சேச்சே! விலை குறைக்க அவருக்கு என்ன அதிகாரம்? என்று விவரம் பேசிய வித்தகர்கள் இன்று கலெக்டர் அலுவலகங்களின் முன்புதான் நிற்கப்போகிருர்கள்—முழக்கம் எழுப்பிட!

சேர்ந்து கிளர்ச்சி நடாத்துவோம், வாரீர்! என்று ஒருசாரார் அழைக்கக்கூடச் செய்கிருர்கள். நம்மைத்தான் தம்பி! நம்மைத்தான்!!

காலங்கடந்தாகிலும் இந்தக் கருத்து எழுந்தது பற்றி எண்ணிடும்போது, சிறையிலே அன்றுபட்ட அல்லல்பற்றிய நினைப்பு மறந்தேபோகிறது. விதைத்தது வீண்போகவில்லை என்ற மகிழ்ச்சி பெறுகிருேம்.

கிளர்ச்சி நடத்தத் தெரியாத 'தலைவர்கள்'கொண்டதாமே, தி. மு. க.!

இன்னும், மற்றவர்கள் கிளர்ச்சி துவக்கவில்லை, திட்டமிட்டபடி!

இதற்குள், கடைகள் சூறையாடப்பட்டன, கருப்புக் கொடி ஆர்பாட்டம் நடைபெற்றது, கல்வீச்சும் பதிலுக்குத் துப்பாக்கி வேட்டும் நடைபெற்றுவிட்டன. கிளர்ச்சிக்காரர்களிலும் சிலர் மாண்டனர்; போலீசிலும் சேதம்!!

கிளர்ச்சியின் இலக்கணம்பற்றியும், தலைவர்களின் தன்மைபற்றியும், பெருங்குரல் கொடுத்த பெம்மான்கள் அது கண்டு ஒருவார்த்தை! கிடையாதே! இதோப

"காஞ்சி"

சந்தாவிகிதம்

ஆண்டு சந்தா	ரூ.	10—00
ஆறுமாத சந்தா	ரூ.	5—00

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

தேசம்? இல்லை! அறிவுரை? வக்குஇல்லை! வாயடைத்துக் கிடக்கிறார்கள்.

ஒவ்வொருவருடைய வாயும், நம்மைப்பற்றிப் பேசும் போதுதான், வல்லமை பெறுகிறது; மற்ற நேரத்தில்? என்ன இனிப்புப் பண்டத்தைக் கொள்கின்றனரோ புரியவில்லை; கப்சிப்!

போகட்டும், நம்மைப் பொல்லாங்கு சொன்னதால் நமக்கொன்றும் சஷ்டமும் இல்லை, நஷ்டமும் இல்லை. இன்று கதையில் வரும் சீமான் மகன்போல, இளகிய மனமும், இரக்கப் பேச்சும் காட்டுகிறார்களே, அது ஒரு வித மகிழ்ச்சியைத் தரத்தான் செய்கிறது.

உணவுப் பண்டங்களின் விலை ஏறிவிட்டிருப்பதற்குக் காரணம், உற்பத்திக் குறைவு அல்ல: உற்பத்தியான பொருளைச் சீராக விநியோகிக்கும் முறை இல்லாததே என்று நாம் முன்பு சொன்னோம், நையாண்டி செய்தனர் நாட்டின் நாயகர்கள். இன்று, அதையே, ஒரு கண்டுபிடிப்புபோல எடுத்துக் கூறுகிறார்கள்; பொதுமக்களின் நினைவாற்றல் அற்றவர்கள் என்ற எண்ணத்தில். பொதுமக்கள் ஆளவந்தார்களைத் திருப்பிக் கேட்கமுடியாதவர்கள்; ஒப்புக்கொள்வோம்; ஆனால் தமக்குள் பேசிக்கொள்ளாமலா இருக்கிறார்கள்; நேற்று வரை இந்த நேர்மையாளர்கள், விலை ஏற்றத்துக்குக் காரணம் உற்பத்தி போதாது என்றார்கள்; இன்று உற்பத்தியில் குறைவில்லை, விநியோகத்தில் கோளாறு என்கிறார்களே; இவர்களுக்கென்ன நாளைக்கு ஒரு நாக்கா? வேளைக்கு ஒருபேச்சா என்று,

விலைவாசி ஏறவில்லை; ஏற்றிவிட்டிருக்கிறார்கள் என்றோம்.

புவிமெச்சும் பொருளாதார போதகாசிரியர் எனத் தம்மைக் கருதிக்கொண்டு, வளரும் பொருளாதாரம் இது, பணப்பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது; அங்கிலையில் விலைவாசி ஏறுவது தவிர்க்கமுடியாதது என்று பேசினர்.

இன்று? நந்தா பேசுகிறார்,

'திட்டமிட்ட ஆபிவிருத்தித் துறையில் விலைவாசிகள் ஏற்றம் தவிர்க்க முடியாதது என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது''

என்பதாக. ஆமாம் என்று ஆளவந்தார்கள் அனைவருமே சொல்கிறார்கள்.

கள்ள மார்க்கட்—

கொள்ளை இலாபம்—

கறுப்புப்பணம்—

என்று முன்பு நாம் சொன்னபோது,

அபாண்டம்

வீண்புரளி

பழிச்சொல்

என்று பேசினர், நமது வாய் அடக்க. இன்று?

கள்ளப் பணம் எவ்வளவு நடமாடுகிறது என திட்டவட்டமான மதிப்பீடு ஏதும் என்னிடம் இல்லை. ஆனால் பல நூறு கோடி ரூபாய்கள் இருக்கும் என்பது நிச்சயம். சமீபத்தில் விலைவாசிகள் விஷம்போல விறுவிறுவென்று ஏறியதற்கு இந்தத் திருட்டுப் பணம்தான் மூல காரணம்.

குல்ஜாரிலால் நந்தா கூறுவது! குறைகூறும் குப்பன் பேச்சல்ல!! இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாம் கூறினபோது, குமட்டல் எடுத்தது, காங்கிரசாருக்கு; இப்போது நந்தா பேசுகிறார், முன்பு நாராசமாகப் பட்டது இன்று நற்பாசுரமாகத் தோன்றுகிறது!!

இப்போதேனும் ஆளவந்தார்கள். பிடிவாதப் போக்கை விட்டுவிட்டு. பிரச்சினையைக் கவனிக்க முன் வந்தது கண்டு மகிழ்கிறேன், தம்பி! விலைவாசி குறைய, துரைத்தனம் மேற்கொள்ளும், தகுதியான எல்லா திட்டங்களையும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கும் என்ற கருத்தினை நண்பர் மனோகரன், டில்லியில் நடைபெற்ற அனைத்துக்கட்சியின் குழுக்கூட்டத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறார். நாம் இப்போது கவனிக்க வேண்டியது, காங்கிரஸ் கட்சியினரின், முன்னாள் நினைப்புகள், பேச்சுகளை அல்ல; மக்களின் அல்லலை மேலும் வளர விடாதபடி தடுத்திட விலைவாசியைக் குறைத்திட வழி கண்டாக வேண்டும் என்பதிலேதான் அக்கறை செலுத்தவேண்டும்.

அதற்காக. நெருக்கடி நேரத்தில் நாலுபேர் கூடி பேசிவிடுவது போதாது என்பதையும், விலைவாசிப் பிரச்சினையைக் கவனிக்க ஒரு நிரந்தர அமைப்பு வேண்டும், அதிலே, எல்லாக் கட்சிகளும் இடம் பெற வேண்டும் என்பதனையும் நான் தெரிவித்தேன்; அரசினர் அந்தக் கருத்தினை ஏற்றுக்கொண்டது அறிந்து மகிழ்கிறேன். இதற்காக,

என்னென்ன முறைகளை துரைத்தனம் மேற்கொள்ளப் போகிறது என்பது விளக்கப்பட்டு, செயல்படுத்தப்படும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்புமிக்க ஒத்துழைப்பு அளிக்கும்.

ஆனால், பரிகாரம் எது என்றாலும், இதமளிக்கும் திட்டம் யாதாக இருப்பினும், விலைவாசி ஏற்றம் காரணமாக, ஏழை, நடுத்தரக் குடும்பங்கள் பட்ட அவதியின்

விற்பனையாளர்களுக்கு

மணியார்டர், செக், டிராப்ட், கடிதங்கள் அனுப்பும்போது உரிமையாளர் "காஞ்சி" அலுவலகம் சின்ன காஞ்சிபுரம் என்று குறிப்பிட்டு எழுதவும்.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

காரணமாக, ஏற்பட்டுவிட்ட விபரீத விளைவுகளை நீக்கிட இந்த ஆட்சியினரால்முடியாது. கதையில் வரும் சீமான் மகன்போல, இளகிய மனம் காட்டலாம், சிறு கடைக்காரன் பித்தனாகிச் செத்துப்போனான்; அவன் பிழைத்தா எழப்போகிறான். ஆயிரமாயிரம் குடும்பங்கள், அல்லலைத் தொடர்ந்து அனுபவித்து, வளைந்த வாழ்வினராகிப்போயினர். இதற்குக் காரணமாக இருந்த போக்கும், அந்தப் போக்கினைக்கொண்டியங்கிய காங்கிரஸ் ஆட்சியையும், பொதுமக்கள் மன்னிப்பார்கள் என்று நான் எண்ணவில்லை. உணவுத்துறையில் ஏற்பட்டுவிட்டுள்ள மோசமான நிலைமைக்கு, முழுப்பொறுப்பு ஏற்றாகவேண்டியவர்கள் காங்கிரசில் ஆள வந்தார்களே!! இன்று பரிகாரம் தேடித்தருகிறோம் என்று ;பேசிவிடுவது, 'பழைய பாவத்தை'த் துடைத்துவிடாது! அது போக்கமுடியாத கரை!

உங்கள் ஆட்சியில்தானே,
உணவு விலை விஷம்போல ஏறிற்று.
பண வீக்கத்தால் பல கேடுகள் விளைந்தன.
கள்ளமார்க்கட் வளர்ந்தது.
கருப்புப் பணம் நெளிந்தது.
கொள்ளை இலாபம் குவிந்தது.
கெய்ரோன்கள் கொழுத்தனர்.

என்று பொதுமக்கள் கேட்டிடத் தவறமாட்டார்கள்! இத்தனை இன்னலை இழைத்துவிட்டு, 'எம்மைவிடத் திறமையாக ஆளவும் ஆட்கள் உளரோ!' என்று வேறு பேசுவது, கரும்புத் தோட்டம் எதற்கு? காஞ்சிரங்காயினும் இனிக்குமோ கரும்பு? என்று கேட்பது போன்றதாகும.

அண்ணன்,

அல்லலைத் துடைப்பீர்

அறிவு, அமைதியான சூழ்நிலையில் வளரும். ஆனால் இன்று அறிவுத்துறையில் பணியாற்றும் ஆசிரியர்களின் மன அமைதியை அரசினர் கெடுத்து வருகின்றனர். கிளர்ச்சி ஆரவாரம், போராட்டம் இவை ஒன்றும் அறியாது இருக்கும் ஆசிரியர்களை அந்நிலைக்கு அரசு கொண்டுபோய் விட்டுவிடுமோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

'இலவசக் கல்வி' என்பது அழகான பிரச்சாரத் தொடராக ஆளும் கட்சியினரால் இன்று பயன்படுத்தப்படுகின்றதைக் காணுகின்றோம். இலவசமாகக்கல்வி, மாணவர்களுக்குக் கிடைக்கட்டும்; அதைத் தப்பு என்பார் யாரும் இல்லை. ஆனால் அந்தக் கல்வியைத் தரும் ஆசிரியரின் வாழ்விலே இன்னல் இல்லாமல் இருக்கவேண்டும். உள்ளதும் போயிற்று என்ற நிலை தோன்றாமலிருக்க வேண்டும்.

இன்று ஏறக்குறைய 4,000 பேர் ஆசிரியர்கள் மற்றும் பள்ளியின் அலுவலகங்களில் பணியாற்றுவோர் முதலியோர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ரூ. 3 முதல் ரூ. 140 வரை பலருக்குச் சம்பளத்தில் வெட்டு விழுந்திருக்கிறது. முன்னமே அவர்கள் பெற்று வந்த சம்பளம் பெருமைக்குரியது என்று சொல்ல முடியாது. அந்நிலையில் இருந்ததையும் குறைப்பது எவ்வகைகளிலும் அறமாகாது.

ஆசிரியரின் அருமை பெருமையைப் பற்றிப் புதிதாக ஏதும் எழுதத் தேவை இல்லை. மருத்துவர் நோய் நீக்குகின்றவர்—ஆசிரியர் என்றும் நோய் வராமல் தடுக்கும் வழியைக் காட்டுகின்றவர். நாளைய சமுதாயத்தை உருவாக்கும் நல்லபணியில் ஈடுபடுகின்றவர். அவருடைய உள்ளத்தில் உள்ள ஊக்கம் என்றும், எக்காரணத்தினாலும் குறையாது பார்த்துக்கொள்ளவேண்டியது நாகரிகமான அரசு செய்யவேண்டிய செயல். இன்று அந்த எண்ணம் அரசுக்கு இல்லை என்று கருத வேண்டியிருக்கிறது.

சென்ற ஏப்ரல் திங்கள் முதல் இந்த 'வெட்டு' விழுந்திருக்கிறது; ஆனால் அரசு இதுவரை மருந்திடவில்லை. ஆசிரியர்களின் குரல் அவர்கள் செவிக்கு எட்டவில்லைபோலும்!

அதனால் ஆசிரியர்களின் சென்னைச் சங்கம் சில நாட்களுக்கு முன் சென்னையில், மக்களின் ஆதரவு திரட்டுவதற்காக எனக் கூட்டம் நடத்தியது. அதில் பேசிய ஆசிரியர்கள், அவர்களோடு தொடர்பு உடையவர்கள் எத்தனை கொதிப்போடு பேசியிருக்கிறார்கள் என்பதைக் கண்டால் பிரச்சனை விளங்கும். ஏழைகளைப் பணக்காரர்கள் ஆக்குவோம் என்று பறைசாற்றும் சர்க்கார் இலவசக கல்வி அளிப்பதற்காக ஏழை ஆசிரியர்களின் வயிற்றில் அடிக்கிறதே! இதுஎன்ன சோஷலிஸம்! எனன அநியாயம்!

✻

"அடக்கத்தோடும் பண்போடும் இடையறாது உழைத்துவரும் ஏழை ஆசிரியர்கள் முதுகில் ஏறி அரசாங்கம் சவாரி செய்வது சரியல்ல"

✻

இப்பேச்சு அரசியல் மேடைப் பேச்சு என்று கருதத் தேவையில்லை. நொந்துகிடக்கும் உள்ளங்களிலிருந்து புறப்படும் பெருமூச்சு, வேதனை—சொற்களாக வெடிக்கின்றன அவ்வளவே!

'கிளர்ச்சி செய்யவேண்டும் என்னும் நோக்கம ஆசிரியர்களுக்கு இல்லை. எனினும் அரசாங்கததின் கவனத்தை ஈர்கக கிளர்ச்சி அவசியம் என்ற நிலைக்கு ஆசிரியர்கள் உந்தப்பட்டால், அபபோது பொது மக்களின் ஆதரவுவேண்டும்! சங்கத்தின் செயலாளர் கேட்கிறார்.

நல்லவர்களின் உள்ளம் என்றும் துணைநிற்கும் என்று ஆதரவு கூறி, ஆசிரியர்களை அந்த நிலைக்கு உநத வேண்டாம் என்று அரசினைக் கேட்டுக்கொள்கிறோம்.

✻

கஞ்ச மலை

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடம் கஞ்சமலை என்பதாகும். சேலம் நகருக்குத் தென்மேற்கே எட்டுமைல் தொலைவில் இந்த இடம் உள்ளது.

கஞ்சமலை முட்டை வடிவமானது. அதன் நீளம் கிழக்கு மேற்காக 4½-மைல். அகலம் தென்வடலாக 2½-மைல். சராசரி உயரம் கடல் மட்டத்துக்குமேல் 2,000-அடி. மலை உச்சி கடல் மட்டத்திற்கு மேல் 3,236 அடி உயரமாகும்.

இந்த மலையின் அடிமட்டத்தில் சுற்றிலும் இரும்பு கனிஜப்படிவுகள் காணப்படுகின்றன. நடு மலையில் இதேபோல் மற்றொரு படிவுகள் காணப்படுகின்றன. மேல் மலையில் மூன்ருவது படிவுகள் உள்ளன. இப்பொழுது மலை அடிவாரத்தை ஒட்டியுள்ள படிவுகள் பற்றிய ஆராய்ச்சியே நடந்துவருகிறது. அங்கு மலையின் வடபகுதியில் குதிரை லாட உருவில் 595-அடி நீளம், 9-அடி அகலம் உள்ள நீண்ட குழி ஒன்று தோண்டி அக்குழியின் சுவற்றிலிருந்து இரும்புக் கனிஜங்களைத் தோண்டி எடுத்து சென்னை (கிண்டி)-யில் உள்ள Government Chemical and Analytical Laboratory-யில் சோதனை செய்திருக்கிருர்கள். அமெரிக்கா ஸ்வீடன் போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்பி அங்கும் சோதனை நடத்தியிருக்கிருர்கள். 35—39 சதவிகிதம் வரை அதில் இரும்பும், 0.02—0.1 சதவிகிதம் பாஸ்பரசும், மிகச்சிறிது அளவு கந்தகமும் அடங்கியிருப்பதாக அச்சோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது.

1944-ம் ஆண்டிலேயே டாக்டர் எம். எஸ். கிருஷ்ணன், திரு. என். கே. என். ஐயங்கார் ஆகிய இருவரும அங்குள்ள இரும்பு கனிஜப் படிவுகள் பற்றி ஆராய்ந்து மொததம 5.5-கோடி டன் கனிஜம் அங்கு கிடைக்கலாம் என மதிப்பிட்டனர். அடிவாரத்தை ஒட்டியுள்ள படிவுகளில் மட்டும் சுமார் ஒருகோடி டன் கனிஜம் கிடைக்கும் என இப்பொழுது மதிப்பிடப்படுகிறது. ஆகவே மலையின மேல்மட்டங்களில் உள்ள படிவுகளில் தான் கீழ் மட்டத்தைவிட அதிகமாக கனிஜங்கள் கிடைக்கக்கூடும். அவற்றைப்பற்றி விரிவான ஆராய்ச்சிகள் இனிததான் நடத்தப்படவேண்டும்.

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஏற்பட்டால் அதில் இருமபை உருக்குவதற்கான சுண்ணும்புக் கற்கள் ஏராளமாக அருகிலேயே கிடைக்கிறது. கஞ்சமலைக்கு மிக அருகில் உள்ள சங்கரி, திருச்செங்கோடு நாமக்கல் ஆகிய தாலுக்காக்களில் ஏராளமாகச் சுண்ணும்புக்கல் படிவுகள காணப்படுகின்றன. திருச்செங்கோடு தாலுக்காவில் உள்ள சிவதாபுரத்தில் 50-அடி ஆழமுள்ள 28-குழிகள் தோண்டி அங்கு கிடைக்கும் சுண்ணும்புக்கற்களை ஆராய்ந்ததில் அவற்றில் 49-சதவிகிதமவரை சுண்ணுமபுச்சதது அடங்கி இருப்பது தெரியவந்தது. மேற்படி மூன்று தாலுக்காக்களிலும் இவ்விதமாள சுண்ணும்புக்கல் படிவுகள் சுமார் 45-கோடி டன் உள்ளதாக மதிப்பிடப்படுகிறது. சேலத்திலிருந்து சுமார் எழுபதுமைல் கிழக்கே நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியும் போதுமான அளவு கிடைக்கிறது. ஆகவே சேலம் அருகே கஞ்சமலையில் இரும்புத்தொழிற்சாலை அமைப்பதற்கான பிரதான மூலப்பொருள் கிட்டத்தட்ட அத்தனையும் அதன் அருகேயே கிடைக்கிறது எனக் கூறலாம். இதனுல் அங்கு தயாராகும் இரும்புக்கான உற்பத்திச் செலவு—இரும்பு கனிஜத்தில் போதுமான அளவு இரும்புச் சத்து உள்ளவரை—மிகமிகக் குறைவாகவும் இருக்கக்கூடும். —குடிஅரசு.

அறம் செய்க!

முத்துடை பாண்டிய நாட்டில் பிறந்து, வறுமையிலே துவண்டு, வாழ வழியில்லாமல் இருக்கின்ற நிலங்களை விற்று, கிட்டிய சிறு பொருளைக் கொண்டு திரைகடலோடியும் திரவியம் தேடு என்ற வாக்குப்படி பர்மா சென்று, அந்நாட்டு மொழி பயின்று, பர்மா மக்கள் செய்ய மறுக்கும் கடைநிலை போன்ற வேலைகளைத் துணிந்து செய்து, மெய் வருத்தி பல்லாண்டு பாடுபட்டுச் சேர்தத பணத்தை அந்நாட்டின் அரசினர் செய்த ஆணவச் சட்டத்தால் ஒரே நாளில் பறிகொடுத்துப்பதறி வந்து சேர்ந்துள்ள பர்மா வாழ் தமிழர்களின் செய்திகளை நாட்தாட்களில் கண்டு, படித்து கண்ணீர் வடிக்கின்ருேம். மனம் வெம்புகினருேம். எங்கே போய்த் தங்குவது, அடுதத வேளை உணவுக்கு வழியெனன, தனககிலலாவிடிலும பெற்றபிள்ளைகளுக்காவது சோறு போட்டாக வேணடுமே என்று கதறும் அமமக்களுக்கு நாம் வழி செய்தாக வேண்டும், வாழ்வளித்தாக வேண்டும். வேலை தேடித் தரும் நிறுவனங்கள் உடனடியாக இதற்கு ஆவன செய்யவேண்டும். கல்வி அதிகாரிகள் அபபிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்க ஆணையிடல் வேணடும்.

மதுரை, இராமனுதபுரம், நெல்லை, குமரி மாவட்டத் தண்டலர்கள், பஞ்சாயத்து ஒன்றிப்பு ஆணையர்கள் தலைவர்கள் அடஙகிய பேரவை கூட்டி வழிமுறை செய்ய வேண்டுகிருேம். நிலம் வழங்கியும், தொழில் கருவிகள் கொடுத்தும வாழவைக்க வேணடுகிருேம்.

ஏனெனில் இம்மக்கள் பெரும்பாலும் சிறிய கிராமங்களில் இருந்து வந்தவர்கள்தான. தமிழக அரசும் இந்நான்கு மாவட்டப் பஞ்சாயதது ஒன்றிப்பு நிறுவனங்களுக்குப் பெரும் நிதி ஒதுக்கி ஊக்குவிகக பணிவன்புடன் வேண்டுகிருேம். —தமிழ்ப்பாவை

4-ம் பக்கத் தொடர்ச்சி

காரணமாகவோ, தொடர்ந்து இந்த அநீதி நடைபெற்ற படி இருக்கிறது.

தோழர் கோவிந்தசாமி, அரசினருக்கு அறிமுக மற்ற ஒரு 'ஏனோ தானோ' அல்ல. அவர் அமைச்சராக இருந்ததில்லை, ஆனால் அமைச்சர்களுக்கு எதிரோ வீற்றிருந்து அரசு முறை பற்றி எடுத்துக் கூறிவந்தவர்; இரு முறை தமிழக சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருந்தவர்; திராவிட முன்னேற்றக் கழகத்தில், தொழிற் சங்க செயலாளர். பொதுமக்கள் தொண்டாற்றி வரும் பொறுப்பு மிக்கவர். அவருக்குக் கரங்களில் விலங்கு பூட்டப்பட்டது! தேவைதானா? நியாயந்தானா? பண்புடமையா? அரசியல் கட்சி மாச்சரியத்தை மறந்து, அமைச்சர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம். கரங்களில் விலங்கு பூட்டப்பட்டதனால், தோழர் கோவிந்தசாமிக்கு எந்தவிதமான 'இழிவும்' ஏற்பட்டு விடாது; இந்த ஆட்சியாளர்கள் எந்தக் கரங்களில் விலங்கு பூட்டினார்களோ, அந்தக் கரங்களைத் தமது கண்களில் ஒத்திக்கொண்டு கனிவு காட்டும் தமிழர்கள் இலட்சக்கணக்கிலே உள்ளனர். தோழர் கோவிந்தசாமி தமது கரங்களில் விலங்கு பூட்டப்பட்டபோது, என்ன பைத்யக்காரத்தனம் இது! என்று எண்ணிச் சிரித்திருக்கக்கூடும்; ஆனால் இந்தச் செய்தி எத்தனை எத்தனை இதயங்களில் வேல் பாய்ச்சி யிருக்கும், எத்தனை கண்களில் நீர் கொப்பளித்திருக்கும் என்பதனை எண்ணிப் பார்க்காத அரசு, தன்னைத் தானே ஏய்த்துக் கொள்கிறது என்றே பொருள்படும்.

விலங்கிடாது அழைத்துச் சென்றால், போலீஸ் பிடியிலே இருந்து தப்பி ஓடி தலை மறைவாகி விடக் கூடிய, பயங்கரவாதியா தோழர் கோவிந்தசாமி! ஆளவந்தார்கள் இதனை அறியார்களா!!

நம்மை எதிர்ப்பவர்கள் எத்தகைய இம்சையையும், இழிவையும் பெற்றுத்தான் தீரவேண்டும் என்ற கொடிய நினைப்புடனா இருக்கவேண்டும், காந்தீய நெறி நிற்பவர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் ஆளவந்தார்கள்.

வெட்கப்படுகிறோம் —தோழர் கோவிந்தசாமியின் கரங்களில் விலங்கு பூட்டப்பட்டது என்பதற்காக அல்ல—ஆளவந்தார்கள், எதிர்க் கட்சியினரிடம் காட்டும் பண்பற்ற இந்தப் போக்கு கண்டு.

★

விளக்கவும் வேண்டுமா!

தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் தலைவர்களின் 2-வது மகாநாடு நடந்து முடிந்து விட்டது.

எதிர்பார்த்ததுபோல, ஏதாவது உருப்படியான திட்டமோ-ஏற்பாடோ அந்த மகாநாட்டின்மூலம் ஏற்படுமா என்ற சந்தேகம் நமக்கு மட்டுமல்ல, மகாநாட்டில் கலந்துகொண்ட அனைவருக்கும் தோன்றியிருந்தால் அது ஆச்சரியமல்ல. மகாநாட்டின் நடவடிக்கைகள் பற்றி அநேகமாக எல்லாப் பிரதிநிதிகள் என்று கூற முடியாவிட்டாலும் — பெரும்பான்மையானவர்கள் தங்களின் அதிருப்தியை மிகவும் நன்றாக எடுத்துக் காட்டினார்கள். பஞ்சாயத்துகளின் பொதுத் தேர்தல்கள் நெருங்கிவிட்டதால் ஏதோ 'காமா—சோமா' வென்று இப்போது நடப்பவை நடக்கட்டும் என்றுதான் எல்லோரும் எண்ணினார்கள் என்று கூறினால் அது தவறாகாது.

சுயராஜ்யம் என்பது காந்தி ராஜ்யம் — காந்தி ராஜ்யம் என்றால் பஞ்சாயத்து ராஜ்யம்—அந்த 'ராஜ்யம்' அமைத்திருக்கிறோம் என்று காங்கிரஸ் கட்சியும் அமைச்சர்களும் பேசுகிறார்கள். பேசுகிறார்களா! வீர கர்ஜனைபுரிகிறார்கள்!

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாநாடு நடந்ததாம்-அதுபற்றி, 'பஞ்சாயத்து செய்தி' எனும் இதழ் எழுதியுள்ள தலையங்கப் பகுதியை மேலே தந்திருக்கிறோம். பஞ்சாயத்துராஜ்யம் எந்த இலட்சணத்தில் இருக்கிறது என்பது அதற்கான மாநாடு நடத்தப் பட்ட விதத்திலிருந்து தெரிகிறது அல்லவா! மேலும் விளக்கவும் வேண்டுமா!!

அண்ணாவின் கருத்தோவியங்கள்

பாவையின் பயணம் ... 1.50
அரசாண்ட ஆண்டி ... 1.50
மதுரைக்கு டிக்கெட் இல்லை ... 2.00

கிடைக்குமிடம் :

பரிமளம் பதிப்பகம் ◆ சின்னகாஞ்சீபுரம்.

JAYA

16-864

அந்திக் கலம்பகம்

பொன்னி! செந்தாழை எனக்கு இல்லையா! நீ மட்டும் கூந்தலில் வைத்துக்கொண்டு வந்து காட்டு கிருயே, நியாயமா?

உங்களுக்குத் தாழம்பூ பிடிக் காதோ என்னமோ என்று எண் ணிக்கொண்டேன்......

தாழம்பூ, கர்ஞடகம் என்பது தான் என் கருத்து...

கேட்டீர்களா, பட்டு சொல்வதை. பட்டு சொல்வதுபோல, இந்தக் காலத்துப் பெண்கள், தாழப்பூவைக் கர்ஞடகம் என்றுதான் சொல்கிருர் கள்.

தாழம்பூ வைத்து ஜடை போட் டுக்கொண்டால், தனி அழகுதான் பொன்னி!

தாழம் பூவுக்குள்ளே சிறிய நாகம் இருக்குமாமே...

வாசனையுள்ள எந்த இடத்திலும் பொருளிலும் பாப்பு இருக்கும் பட்டு! தாழப்பூ, பட்டையாக இருப்பதால், அதிலே பாம்பு புகுந்துவிடுகிறது என்று சொல்லி வைத்தார்கள்.

நாளை மறுநாள் தாழம்பூ கிடைத் தால், மறந்துவிடாமல் எனக்கும் அனுப்பு பொன்னி!

அதென்ன ஏமு! தாழம்பூவிஷயத் திலே உனக்கு அவ்வளவு ஆவல்?

பட்டு! பூ என்ருலே நமக்கு ஆசை தான்; அதிலும் தாழம்பூவின் மணம் இருக்கிறதே, அது தனியானது; மனதுக்கு ரொம்பவும் மகிழ்ச்சி தரு கிறது.

நம்ம நாட்டுப் பெண்கள் வைத் துக்கொள்ளும் மலர் அழகுக்காக மட்டுமல்ல, ஏமு! நமது மலர்களிலே மணத்துடன் மருந்துச் சக்தியும் உண்டு...

கனகாம்பரம் நீலாம்பரம் இவை களிலே என்ன இருக்கு பொன்னி!

அவைகள், இப்போது மலர்கள் என்ற பெயர் கொண்டுவிட்டன. நான் சொல்வது, பழைய நாளி லிருந்து பழக்கமாக இருந்து வரும் மலர்கள்...

மலர்களிலே என்ன மருந்துச் சக்தி இருக்கிறது?

மனேன்மணி இல்லை; இருந்தால் அவளைக் கேட்டிருக்கலாம்; டாக்டர் அல்லவா?

ஏமு! மனேன்மணி படித்த வைத் தியப் படிப்பிலே நமது மலர்களைப் பற்றி என்ன எழுதி இருக்கிறதோ எனக்குத் தெரியாது; நான் ஒரு பழய தமிழ் ஏட்டில் படித்ததைச் சொல்கிறேன்.

என்ன எழுதி இருக்கிறது சொல்லு, பொன்னி!

தாழம்பூவுக்கு இருதய பலம் தரு



கிற சக்தியும் வாதநோய்களை நீக்கும் சக்தியும் இருக்கிறதாம். அதுபோலவே மகிழம் பூவுக்கும் உண்டாம். மகிழம்பூ வைத்துக்கொண்டால், தலைவலிகூட நின்றுவிடுமாம்.

மகிழம்பூ, பொன்னி! எத்தனை சிறுசு, ஆனா என்ன அருமையான மணம்!

பார்ப்பதற்கு மகிழம்பூ என்னமோ உலர்ந்துபோன தனழமாதிரி இருக்குது, பொன்னி! ரோஜாமாதிரி, அழகு இல்லை.

ரோஜாகூட, பட்டு! இருதய பலத்தைக் கொடுக்கும ம். சதா சளி இருக்குபாரு சிலருக்கு அவர்கள் ரோஜாபுஷ்பத்தை வைத்துக்கொண்டால், சளி நின்றுவிடுமாம்.

அதெல்லாம் சாதாரண சளியாக இருந்தால்தான். லடாக் போர்முனை, நேபா போர்முனை போன்ற இடத்திலே இருக்கிற பனியாலே ஏற்படும் சளி, இலேசிலே போகாதாம்.

பொன்னி! பார்த்தயா! பட்டு ஒரு தாவு தாவிவிட்டா, லடாக் வரையிலே......

போங்க, நீங்க எதையோ எண்ணிக்கொண்டு பேசறிங்க......

என் தம்பி, இப்ப லடாக் பக்கம் இல்லை, ஏமு! அவன் பஞ்சாப் முதலிய இடங்களைச் சுற்றிக்கொண்டிருக்கிறன்—கடிதம் வந்தது.

அந்தப் பஞ்சாப்பில்தானே கெய்ரோன் என்ற ஆசாமி கோடி கோடியாப் பணம் சேர்த்துக்கொண்டானும் மந்திரி வேலை பார்த்ததாலே...

கொள்ளை அடித்தான். வழக்குகூட இருக்குது ஆசாமி பேரிலே.

பெரிய வக்கீல்கள் நடத்துவா, வழக்கை...!

ஆரம்பமாச்சா, குத்தல் பேச்சு! நான் என்ன, நான் போய் நடத்தப் போகிறேன் கெய்ரோன் வழக்கை என்ரு சொன்னேன்......

ஏன் பட்டு! அப்படி ஒரு காலம் வரக்கூடாதா என்ன?

பொன்னியும் நீங்களும் சேர்ந்து சதா என்னைக் கேலி செய்தபடி இருந்தா எனக்கு எப்படி தெம்பும் நம்பிக்கையும் ஏற்படும். நீங்க பேசுவதைக் கேட்கக் கேட்க எனக்கு சோர்வும் அதைரியமும் ஏற்பட்டுவிடுது.

பைத்யமே! மனசை தளரவிடலாமா! எங்களோட சிநேகிதி, வக்கீல் வேலையிலே முன்னேறணும் புகழ் பெறவேணும் என்கிற ஆசை எங்களுக்கு இருக்காதா!

பெண்கள் வக்கீல் வேலையிலே பிரகாசிக்க இப்ப சூழ்நிலை சரியா உருவாகவில்லை, ஏமு!

பெண்கள், திறமைசாலிகள் என்பதை இப்ப யாரும் மறுக்கறதில்லை.

சிலோன் நாட்டை ஆள்வதே ஒரு பெண்தானே. பண்டாரநாயகா.

ஒரு சேதி வந்ததே பத்திரிகையிலே பார்த்தீர்களா...?

பண்டார நாயகா, நம்ம தமிழர்களைத் துரத்தப்போகிறது பத்தின செய்திதானே......

அதான் லால்பகதூர் பேசப் போகிறாராமே அதைப் பற்றி......

என்ன பேசுகிறர்களோ போ. தொடர்ந்து தொல்லை கொடுத்தபடி தான் இருக்கிரு, தமிழாளுக்கு, சிலோனிலே......

பர்மாவிலே நடந்த அனியாயத்தைப் பார்த்துக்கொண்டு தானே இருக்கிறோம்.

ஆமா, காமராஜருக்குத்தான் அபாரமான செல்வாக்காமே, ஏன் அவர் இந்திய சர்க்காருக்கு ஒரு உத்திரவு போட்டு, பர்மா சர்க்காரைத் தட்டிக் கேட்கச் சொல்லக் கூடாது.

ஏமு! இப்ப காமராஜர் வேறே பிரச்சினையிலே ஈடுபடவே மாட்டாராம். அவர் கவனிக்கிற ஒரே பிரச்சினை, சோற்றுப் பிரச்சினைதானும்.

போதுமே, அந்தப் பிரச்சினையை அவர் கவனிக்கிற இலட்சணம். படி ஒண்ணேகால் ரூபாய் சொல்ரு, அரிசி.

அமெரிக்காவிலே இருந்து அரிசி வந்ததும், விலை குறையுமாம்; சொல்லிக் கொள்கிரு.

அமெரிக்காவிலே ஏது அரிசி? அங்கே கோதுமைதானே விளையும்?

என்ன பொன்னி! அப்படிச் சொல்றே. நான் பார்த்தனே பேப்பர்லே. போட்டிருந்தாளே.

ஏன், பொன்னி! நீ படிக்கலையோ அந்தச் செய்தியை......

படித்தேன், படித்தேன். ஆனா, முன்னே, திராவிட முன்னேற்றக் கழகத்தார், அமெரிக்காவிலே இருந்து அரிசி வரவழைக்கலாமே என்று கூறினபோது, இந்தக் காங்கிரஸ் மந்திரிகள், எத்தனை கேலி செய்தார்கள் தெரியுமா அமெரிக்காவிலே அரிசி ஏது என்று......

அட, அதுக்காகச் சொல்றயா... ஆமாமாம், அவர்கள் எதையும் பேசுவா......ஆட்சியிலே இருக்கிறதாலே......பொன்னி! அமெரிக்கா சண்டையிலே இறங்கி விட்டதாமே, என்னடி ஆகும். பயமா இருக்குதே...

கவலையாத்தான் இருக்குது போர் மூண்டு விடுமோன்னு.

லால்பகதூர் கூடக் கவலையா இருக்குதுன்னுதான் சொல்கிருர்.

சண்டையை வளரவிடமாட்டோம் என்று அமெரிக்கத்தலைவர் சொல்லி இருக்கிறர். அந்தப் பேச்சு கொஞ்சம் மனதுக்கு நிம்மதியைக் கொடுக்குது.

என்னமோ போ ஏமு! இந்த அமெரிக்காவிடம் இருக்கிற பணத்துக்கு, மனித குலத்துக்கே நோய் நொடி ஏற்படாதபடியான வழிகளை எல்லாம் கண்டு பிடித்து, உலகம் உள்ளளவும் நல்ல பெயர் வாங்கலாம். வீணான 'ராஜதந்திர' வேலையிலே இறங்கி, பொருளைப் பாழாக்கிக் கொண்டு விடுகிறது...

சந்திரமண்டலம் போகிறதுக்காக முயற்சி நடக்குதாமே.

விஞ்ஞானம் வளரவேண்டியது தான் ஏமு! ஆனா, பூலோகத்திலே இருக்கிற எத்தனையோ பிரசசினைகளைத் தீக்க பணம் செலவழிக்கணும்—இப்ப என்ன அவசரம், சந்திர மண்டலம் போக...

அதுவும் நியாயந்தான்...... பொன்னி! சந்திர மண்டலத்தை யார் பிடித்துக் கொள்கிறர்களோ அந்த நாட்டுக்காரர் அங்கே இருந்து பூலோகத்தின்மீது அணுகுண்டு போட்டு நாசம் செய்து விடுவார்களாமே. கேட்கும்போதே பயமாக இல்லையா?

அதனுலேதான் விண்வெளி எந்த ஒரு நாட்டுடைய ஆதிக்கத்திலேயும் இருக்கக்கூடாது; சர்வதேச சபையிடம் இருக்கவேண்டும் என்று ஒரு சட்டம் செய்திட வேண்டும் எனறு சிலர் இப்பவே பேசிக்கொண்டிருக்கிறதாக பத்திரிகையிலே பார்ததேன்.

பட்டு சொல்வது உண்மைதான். ஆனா, ஐக்கியநாடு சபையே இப்ப, செலவுககு பணம் இல்லாமல் திண்டாடும் நிலையிலே இருக்குதாம். அந்த சபைக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுக்க ரஷியா சம்மதிக்கவில்லையாம்......

இதென்னடி பொன்னி! அதிசயமாக இருக்குது. பலநாடுகளுக்கு உதவி செய்கிற ரஷியா, கொடுக்க வேண்டிய பணத்தை ஏன் கொடுக்க மறுக்கணும்.

காங்கோ நாட்டிலே அமைதி ஏற்படுத்த, ஐக்யநாட்டுசபை வேலை செய்ததிலே பெரும் செலவு. அந்தச் செலவுத் தொகையிலே ரஷியா பங்குதரமுடியாது என்று கூறிவிட்டது. ஏன் என்றுகேட்டா, காங்கோ நாட்டிலே ஐக்கியநாடு சபை கையாண்ட முறைகளை நான் ஒப்புக்கொள்ள முடியாது என்று சொல்லுது ரஷியா.

இந்தச் சபை ஏன் ரஷியாவுக்கு விருப்பமில்லாத காரியத்திலே ஈடுபட்டுது?

என்ன செய்யறது! ஒருபக்கம் அமெரிக்கா, மற்ற ஒருபக்கத்திலே ரஷியா! இந்த இரண்டு நாடுகளும் இழுக்கிற பக்கமெல்லாம் போக வேண்டி இருக்குது அந்தச் சபைக்கு ....

இரண்டு சக்திகளுக்கிடையிலே அகப்பட்டுக்கொண்டா, சங்கடம் தான்...என்ன செய்வது......

எது எதுக்கோ பணம் செலவாகுது. உலக சமாதானத்துக்காகன்னு ஒரு சபை இருக்குதே என்ற எண்ணத்திலே ரஷியா பணம் கொடுக்கலாம். மனம் இருந்தா மார்க்கம் உண்டு என்பார்களே.

மனம் இருக்குதே, ஏமு! ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதம். விசித்திரம். ஒரு வேடிக்கை தெரியுமா. அமரிக்காவிலே ஒரு சீமான், ஒரு இலட்சம் பவுனுக்குமேலே பெறுமானமுள்ள சொத்தை, தன்னுடைய இரண்டு பூனைகளுக்கு உயில் எழுதிவிட்டானும்......

என்னது? என்னது? பூனைக்கு சொத்து எழுதிவைத்தாஞ?

ஆமாம் ஏமு! பேப்பர்லே வந்திருக்குது.

அதிசயமாயிருக்குது. பூனைகள் எத்தனை காலம் வாழப்போகுது இந்தச் சொத்தை வைத்துக்கொண்டு ....

சொத்து என்ன ஆகுமோ தெரியாது, ஆனு பூனைகள் 13-வருஷம் இருக்குமாம உயிரோடு......

மனுஷாளுக்கு நூறு வயது என்று சொல்லக்கேட்டிருக்கிறோம்.

ஏன்! அதற்குமேலேயும் இருக்கிருளே. ஒரு கிழவி 115-வயது. அவளுக்குப்போய் ஒருத்தன் காதல் கடுதாசி எழுதியபடி இருக்கிருனும். அந்தக் கிழவியே சொல்லியிருக்கா ஒரு விருந்திலே.

காலம் கலி அல்லவா! எல்லாம் நடக்கும்.

அதென்ன அப்படிச்சொல்லிவிட்டே ஏமு! புண்ய யுகத்திலே மட்டும் எல்லாம் ஒழுங்கா நடந்ததோ?

ஆரம்பித்துவிட்டயா உன்னுடை சுயமரியாதைப் பேச்சை? என்னடிம்மா அக்ரமம் நடந்தது அந்தக் காலத்திலே.

அனேகம். ஒண்ணு கேளுங்களேன். அறுபதாயிரம மனைவிகளாமே தசரதசக்ரவர்த்திக்கு. கலி காலத்திலேயா அது.

போடி! என்னமோ கதைக்காகச் சொல்லி இருக்கா.

இப்படிக் கேட்டா கதை! இல்லை! மத்தநேரத்திலே கடவுள் விஷயம் —பக்திவிஷயம்.

அடி அம்மா! உன்னுேடு பேசி என்னுலே சமாளிக்க முடியாது.

பொன்னிக்குத் தெரியுமோ தெரியாதோ ஏமு! மதவிஷயமாக பக்தர்கள் மனம் புண்படும்படி பேசினுல், தண்டிக்க சட்டத்திலே இடம் இருக்குது......

ஏண்டிபட்டு! என் பேரிலே ஒரு வழக்கு போட்டுத்தான் பாரேன்...

போடத்தான்போரு பட்டு. மத விஷயத்துக்காக அல்ல. நீ இன்னமும் உன் தம்பியை ஊருக்கு திரும்பி வரச் சொல்லாமலிருக்கிறயே, அதுக்காக.

உங்களோடு அரட்டை அடிக்கிறதைவிட, வீட்டுக்குப்போய் ஏதாவது சட்டத்தைப் படிக்கலாம். நான் வர்ரேன்......

டீ! பட்டு! பட்டு! போயேவிட்டாளே......

நேரமும் ஆச்சி...நானும் போய் விட்டு வர்ரேன், ஏமு!

✻

திரு. ஈழத்து அடிகளுக்கு

பொன்னுடை போர்த்தும் விழா

[1—9—64]

மேற்படி நிகழ்ச்சி 20-10-63ல் மதுரையில் நடத்துவதாக விழாக் குழுவினரால் முடிவு செய்யப்பட்டது.

அண்ணு அவர்கள் சிறை சென்றுவிட்டதால் ஒத்திப் போடவேணடியதாயிற்று.

இப்போது 1-9-64ல் சென்னையில் மேற்படி விழாவினை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருப்பதால், அடிகள் இதுவரை ஆற்றிய தொண்டினைப் பாராட்டிப் பொன்னுடை போர்த்திச் சிறப்பிக்கவும், இனி அவர் மேற்கொள்ள இருக்கும் ஆராய்ச்சிப் பணியினுக்குப் பேருதவி செய்யவும் மேற்படி விழாக் குழுவினர் விரும்புவதால், அன்பர்கள் பொருள் உதவி வழங்குவதுடன் 1—9—64 அன்று சென்னையில் நடைபெற இருக்கும் விழாவுக்கும் வருகைதந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

நிதி அனுப்புவோர்:

மு. கருணநிதி,
ஆசிரியர்
'முரசொலி'
சென்னை-6.

அன்புள்ள,

அண்ணுதுரை
மு. கருணநிதி
என். வி நடராசன்
அன்பில் தருமலிங்கம்
மன்னை நாராயணசாமி
முன்னுள் மேயர்கள்!
வி. முனுசாமி
அ. பொ. அரசு.

சின்ன காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "அல்லி" அச்சகத்தில், (உரிமையாளர்) சி. என். ஏ. இளங்கோவனுல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணுதுரை.